DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 31/2025

Miscellaneous :

Sessions : PW 5

Deposition of Witness for

**A1 to A4 எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | வீரமுத்து |
| Father / Husband Name | பஞ்சாட்சலம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **31.07.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஆமையம்பட்டில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் ஒரு நாள் வந்து எங்கள் ஊரில் நடந்த சண்டை சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

2. கடந்த 05.02.2022 ம் வருடம் மதியம் 2.00 மணிக்கு எங்கள் ஊரில் உள்ள விநாயகர் கோவில் அருகே நடந்து சென்றபோது போலிசார் பழனி மற்றும் செல்வம் குடும்பதாருக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனை சம்மந்தமாக என் முன்னிலையில் வரைபடம் வரைந்து தயார் செய்த பார்வை மகசரில் நான் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 31/2025

Miscellaneous :

Sessions : PW 4

Deposition of Witness for

**A1 to A4 எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | சேகர் |
| Father / Husband Name | குப்புசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **31.07.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஆமையம்பட்டில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள என்னுடையது அல்ல. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் ஒரு நாள் வந்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் செய்தேன்.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

2. கடந்த 05.02.2022 ம் வருடம் மதியம் 2.00 மணிக்கு எங்கள் ஊரில் உள்ள விநாயகர் கோவில் அருகே நடந்து சென்றபோது போலிசார் பழனி மற்றும் செல்வம் குடும்பதாருக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனை சம்மந்தமாக வரைபடம் வரைந்து தயார் செய்த பார்வை மகசரில் நான் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 31/2025

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**A1 to A4 எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | கோவிந்தன் |
| Father / Husband Name | ராமகிருஷ்ணன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **31.07.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஆமையம்பட்டில் வசித்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். சம்பவம் குறித்து எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 22.01.2022 ம் தேதி இரவு 11.00 மணிக்கு ஆஜர் எதிரிகள் ராஜலட்சுமி செல்வம் என்பவரை அவர்களின் வீட்டிற்குள் செல்லும்போது வழி மறித்து அவர்களிடம் சண்டை போட்டு பிரச்சனை செய்ததை நேரடியாக பார்த்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 31/2025

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**A1 to A4 எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | செல்வம் |
| Father / Husband Name | பழனி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **31.07.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஊரப்பாக்கத்தில் வசித்து சினிபீல்டில் உதவியாளராக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 22.01.2022 ம் தேதி இரவு 11.00 மணியளவில் நானும் என் மனைவி மற்றும் இரண்டு பெண் குழந்தைகளுடன் என் மனைவி திண்டிவனத்திற்கு சென்று கொண்டிருந்தபோது என் மனைவிக்கு உடல்நிலை சரியில்லாததால் என் மனைவி மற்றும் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு அம்மைப்பட்டுக்கு சென்றேன். அப்போது என் வீட்டிற்கு வெளியில் படுத்துக்கொண்டிருந்த அப்பா மற்றும் அம்மா ஆகியோர் என்னை பார்த்து நீ ஏன் அந்த தெவிடியாவ கூட்டிக்கொண்டு இங்கு வர அவ ஜாதி என்ன என்று கேட்டு என்னையும் என் மனைவியையும் பழனி மற்றும் பொன்னி அடித்தார்கள். என் மனைவியை நோட்ராஜ் மற்றும் சங்கீதா என்பவரும் வயிற்றில் எட்டிஉதைத்து சாவுடி என்று சொல்லியும் மார்பின் மீது அடித்தார்கள். பின்னர் என் மனைவி மயக்கம் அடைந்து கீழே விழுந்துவிட்டார். சதீஷ் மற்றும் ராஜா என்பவர்கள் சண்டையை தடுத்தார்கள். பின்னர் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சம்பவதினத்தன்று நள்ளிரவு 12.45 மணிக்கு சென்றோம். என் மனைவி பிளீடிங் ஏற்பட்டதால் ஊசி போட்டார்கள். மேல்சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்ல சொன்னார்கள். பின்னர் மறுநாள் மேல்மருவத்தூர் காவல் நிலையம் சென்று சம்பவம் புகார் கொடுத்தோம். அங்கு இருந்த காவலர் உதவி ஆய்வாளர் அமுதா என்பவர் எங்களை விசாரித்தார். குடும்ப பிரச்சனை என்பதால் எங்களை வீட்டிற்கு போக சொன்னார்கள். 5 நாட்கள் கழித்து என் மனைவிக்கு பிளீடிங் ஏற்பட்டதால் 31 ம் தேதி செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்ற போது மருத்துவர் கரு களைந்துவிட்டதாக சொன்னார்கள். என் மனைவி இரண்டு நாட்கள் அங்கு சிகிச்சை எடுத்துக்கொண்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. ஊரபாக்கத்தில் இருந்து கிளம்பும் போது மாமனார் வீட்டிற்கு செல்லதான் திட்டமிட்டோம். என் மனைவிக்கு உடல் நிலை சரியில்லாததால் நாங்கள் எங்கள்

வீட்டிற்கு சென்றோம். மேற்படி விவரங்களை புகாரிலோ அல்லது போலிசார் விசாரணையிலோ சொன்னேனா என்றால் சொன்னேன். நான் மேற்படி சொன்னதை வாக்குமூலமாக பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். என்னை அடித்தார்கள். காயம் எதுவும் பெரிதாக ஏற்படவில்லை. சம்பவத்திற்கு பிறகு எனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் நேராக மருத்துவமனை சென்றேனா என்றால் ஆமாம். மேல் சிகிச்சைக்கா ஏன் போகவில்லை என்றால் அதற்கு முன்னால் புகார் கொடுத்துவிடலாம் என்று சென்றேன். நான் என் மனைவி மற்றும் இரண்டு பெண் குழந்தைகள் மற்றும் எங்கள் ஊர் தலைவர் குமாருடன் சென்றோம். நான் மற்றும் என் மனைவி சொல்ல குமார் காவலர் முன்னிலையில் புகார் எழுதினார். காவலர் format சொல்ல நாங்கள் எழுதினோம். புகார் கொடுத்துவிட்டு மேல்சிகிச்சைக்கு செல்லாமல் வீட்டிற்கு சென்றோம் என்றால் சரிதான்.

3. செங்கல்பட்டு மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பு என் மனைவி பிரச்சனை எதுவும் இல்லை என்பதால் வேறு எந்த மருத்துவமனைக்கும் செல்லவில்லை என்றால் சரிதான். என் மனைவி எப்போது கன்சிவ் ஆனார் என்றால் சம்பவத்திற்கு முன்பு 45 நாள்களுக்கு முன்பு இருக்கும். 31 ம் தேதி செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் காவலர் யாரேனும் விசாரித்தார்களா என்றால் இல்லை. மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் எந்த காவலர் விசாரித்தார் என்றால் மருத்துவமனையில் உள்ள காவலர் விசாரித்தார். சம்பவத்திற்கு முன்பு எனக்கும் என் குடும்பத்தாருக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். என் மகளின் பிறந்தநாள் விழாவிற்கு பத்திரிக்கை கொடுக்க நான் என் வீட்டிற்கு சென்று அவர்களை அழைத்தேன் ஆனால் அவர்கள் வரவில்லை. பின்னர் எனது பாட்டி இறந்ததற்காக சென்றேன். பின்னர் சம்பவதினத்தன்று சென்றேன். திருமணம் நடந்த 13 வருடங்களில் நான் 3 முறை தான் என் வீட்டிற்கு சென்றுள்ளேன் என்றால் சரிதான். சம்பவத்தினத்தன்று சொத்து சம்மந்தமாக பேச்சுஇருந்தது என்றால் இல்லை. புகார் கொடுத்த பிறகு காவலர் 4 நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். சம்பவயிடத்தில் என்னையும் என் மனைவியையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

4. சம்பவம் என் மனையின் அதீத பேச்சால் தான் நிகழ்ந்தது என்றாலும் அதனால் என் மனைவி மீதும் எதிரிகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் தெரியாது. மேற்படி புகாரில் என் மீதும் என் மனைவி மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எங்கள் மீது கொடுத்த புகார் எனக்கு தெரியும் என்றாலும் மேற்படி புகாரில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல. சொன்ன நேரத்தில் மருத்துவமனை செல்லவில்லை என்றாலும் சொன்ன தேதி மற்றும் நேரத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும் ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 31/2025

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**A1 to A4 எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | ராஜலட்சுமி |
| Father / Husband Name | செல்வம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **31.07.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஊரப்பாக்கத்தில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த தேதி மாதம் ஞாபகம் இல்லை. கடந்த 2022 ம் வருடம் நான் என் கணவர் செல்வம் மற்றும் எனது இரண்டு பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு எனது மாமியார் ஊரான ஆமையம்பட்டுக்கு சென்றபோது என் மாமனார் வீட்டில் அமர்ந்துகொண்டிருந்தபோது என் மாமியார் பொன்னி என்னை எதுக்குடி இங்க வர என்று சொல்லி என்னை துடப்பத்தால் இடுப்பில் அடித்தார். எனது நாத்தனார் கணவர் நோட்ராஜ் @ வெங்கடேசன் என்பவர் என்னை தெவிடியா நாரகுதி இங்க வர மூன்றாவது பிள்ளை யார்க்கு வாங்கிவந்து இங்க வரியான்னு சொல்லி எனது ஆடையை கிழித்து மார்பில் அடித்தபோது எதிர் வீட்டில் இருக்கும் சதீஷ் மற்றும் ராஜா என்பவர்கள் வந்து எனக்கு தண்ணீர் கொடுத்தபோது அவர்களை தடுத்து எதுக்கு தண்ணீர் குடுக்கிறாய் என்று அவர்களை தடுத்தார்கள். அடித்ததை தடுக்க வந்த என் கணவரையும் கீழே தள்ளி அடித்தார்கள். என் மாமனார் பழனி என்பவர் என்னை இழுத்து வந்து ரோட்டில் போட்டு அடித்தார். எனது மாமியார் மற்றும் நாத்தனார் சங்கீதா இருவரும் நோட்ராஜை ஒரு அரையில் வைத்து சாத்தினார்கள். நோட்ராஜ் பின்பக்கமாக ஓடிவந்து எனது வயிற்றில் எட்டி உதைத்து நீ கிழக்கு மேற்காக தாலிகட்டி வந்தாயா என்று திட்டினார். எனக்கு மார்பிலும் அடிவயிற்றிலும் காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது. நான் வேறு சமூகத்தினரான எனது கணவரை காதல் திருமணம் செய்து கொண்டதால் நோட்ராஜ் மற்றும் பழனி என்னை அடிக்கும் போது இடையச்சி என்று சொல்லி சாவுடி என்று அடித்தார்கள். எதிரிகள் என்னை அடிக்கும்போது நான் 3 மாதம் கர்பமாக இருந்தேன். பின்னர் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சென்ற போது அங்கு வலிக்கு மட்டும் ஊசி போட்டார்கள். எனக்கு .2022 ம் வருடம் 31ம் தேதி மாதம் ஞாபகம் இல்லை கருகளைப்பு ஏற்பட்டது. எனது கணவர் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கலாம் என்று சொன்னபோது எங்களை போகவிடாமல் தடுத்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான்

கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ1ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** நான் ஊரபாக்கத்தில் இருந்து காலை 8.30 மணிக்கு புறப்பட்டு ஆமையம்பட்டுக்கு காலை 11.00 மணிக்கு வந்தோம். சம்பவத்திற்கு முன்பே என் மாமியார் வீட்டிற்கு என் கணவருடன் திருமணமானபிறகு 9 மற்றும் 10 முறை வந்திருப்பேன். நான் BC வகுப்பை சார்ந்தவர். என் கணவர் மற்றும் எதிரிகள் MBC வகுப்பை சார்ந்தவர்கள். சம்பவயம் சுமார் 45 நிமிடங்கள் நடந்தது. நான் காவல் நிலையத்திற்கு சம்பவம் நடந்த மறுநாள் மதியம் 1.30 மணிக்கு சென்றோம். ஆமையம்பட்டிற்கும் மேல்மருவத்தூருக்கும் சுமார் 5 கிமீ இருக்கும். மேல்மருவத்தூருக்கும் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கும் சுமார் 10 கிமீ இருக்கும். மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு எந்த நேரத்தில் சென்றோம் என்று ஞாபகம் இல்லை. நான் மருத்துவமனையில் என்னை 4 பேர் அடித்ததாக சொன்னேன். நான் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றபோது OP சீட்டு கொடுத்தார்களா என்றால் சரிதான். மேற்படி மருத்துவமனையில் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக போக சொன்னார்கள். நான் 31ம் தேதி செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்றோம். இடையில் வேறு எந்த மருத்துவமனைக்கும் செல்லவில்லை என்றால் சரிதான். ந

3. நாங்கள் சோத்துப்பாக்கத்தில் காதல் திருமணம் செய்த போது மாமனார் நாத்தனார் மாமியாரின் தம்பி ஆகியோர் வந்தார்கள். நாங்கள் காதல் திருமணம் செய்து கொண்டதால் எனக்கும் என் மாமியார் வீட்டிற்கும் கருத்து வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். என் திருமணத்தில் என் குடும்பத்தார் பங்கேற்றார்கள். நான் புகாரை உதவி ஆய்வாளர் அமுதா என்பவரிடம் 23ம் தேதி காலை சுமார் 12.40 மணிக்கு கொடுத்தோம். மேற்படி புகாரில் நான் கையொப்பம் செய்த இடத்திலும் புகாரின் மேல் பகுதியிலும் தேதி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்தபிறகு போலிசார் என்னை 23 ம் தேதி முறையாக விசாரணை செய்யாததால் பின்னர் 5ம் தேதியும் விசாரித்தார்கள். போலிசார் குடும்ப பிரச்சணை என்பதால் என் குடும்பத்தாரிடம் பேசுவதாக சொன்னார். புகாரை யார் எழுதினார்கள் என்றால் எங்கள் ஊர் தலைவர் குமார் என்பவர் மருவத்தூர் காவல் நிலையத்தில் வைத்து எழுதினார். மேற்படி புகாரில் உள்ள சாராம்சங்கள் என்ன இருந்தது என்று எனக்கு தெரியும்.

4. புகாரில் பொன்னி என்பவர் துடைப்பத்தால் அடித்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ராஜா மற்றும் சதீஷ் என்பவர்கள் சண்டையை தடுத்தார்கள் என்ற விவரம் புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். ஹெல்மெட்டால் என்னையும் என் கணவரையும் ரோட்டில் வைத்து அடித்தார்கள் என்ற விவரம் புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நோட்ராஜை ரூமில் வைத்து பூட்டினார்கள். பின்னர் அவர் பின் பக்கம் வழியாக வந்து என்னை அடித்த விவரத்தை புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னை ஜாதி பெயர் சொல்லி அடித்த விவரத்தை விவரத்தை புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் உயர் ஜாதி வகுப்பை சார்ந்தவர் என்பதால் என் மாமனார் குடும்பத்தார் அதனை வைத்து பிரச்சணை செய்வதற்கு அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

5. என் கணவர் எந்த சிகிச்சையும் பெறவில்லை என்றால் சரிதான். என் கணவரையும் அடித்தார்கள். ஆனால் அவரை அதிகமாக அடிக்கவில்லை. என்னை

தான் அதிகமாக தாக்கினார்கள். என் கணவர் மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லை. மேற்படி சம்பவம் சொத்து சம்மந்தமானது என்றால் சரியல்ல. 31ம் தேதி செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான சீட்டு போலிசாரிடம் கொடுத்தேன். அவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி சிகிச்சை பெற்ற சீட்டை நான் தற்போது வைத்துள்ளேன். நீதிமன்றத்தில் தற்போது தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் 02.02.20222 ம் தேதி மருத்துவமனையில் டிஸ்சார்ஜ் இருந்து வீடு திரும்பினேன். நான் மருத்துவமனையில் சிகிச்சை பெறாததால் அதற்கான மருத்துவசீட்டு போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆகி 10 வருடங்களாகியதால் சொத்து சம்மந்தமாக சண்டை ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் குறித்து என் மீது எதிரிகள் கொடுத்த புகார் குறித்து எனக்கு தெரியுமா என்றால் இரண்டு வருடங்கள் கழித்து தான் தெரியும். நான் பிணையில் இருந்தோமா என்றால் இல்லை. என் மீது கொடுக்கப்பட்ட புகார் மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் தற்போது நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியாது. நான் கொடுத்த புகார் மீது 13 நாட்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்பதால் புகார் கொடுத்த அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தன்று எனக்கு கருகளைப்பு ஆகவில்லை என்றாலும் நானே என்னை காயப்படுத்தி 31 ம் தேதி மருத்துவமனைக்கு சென்று கருகளைப்பு ஆனதாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன நபர்களோடு புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொத்துக்காக தகராறு செய்தோம் என்றாலும் என் திருமணத்தில் எதிரிகள் யாரும் பங்கேற்கவில்லை என்றாலும் சம்பவதினத்தன்று தான் முதலில் நான் என் மாமியார் வீட்டிற்கு சென்றேன் என்றாலும் சரியல்ல. மாமியார் வீட்டின் சொத்தை அபகரிக்க நான் பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.